பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: புரட்டாசி 13உ (29—9—67) வெள்ளி ★ வெளியூர்: புரட்டாசி 14உ (30—9—67) சனி [இதழ்: 90


### பைத்தியக்கார உலகம்!

"உலக மக்கள் தொகையில் மூன்று சதவிகிதம் பேர் மூளைக் கோளாறு உள்ளவர்கள்!

"இதில் பத்து பேருக்கு ஒருவர், பயப்படத்தக்க அளவுக்குப் பாதிக்கப் பட்டவர்கள்!"

இத்தகவலை, உலக சுகாதார நிறுவனம் தந்துள்ளது.

# அண்ணா ஆளுகிறவரை தமிழகம் பற்றிக் கவலை இல்லை!



## பதவியால் மட்டும் பெருமை பெற்றவர் அல்லர் அவர்!

### காங்கிரசின் வீண்பழிகள் விரக்தியின் விளைவே!

"மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மனிதராக நாளுக்கு நாள் மக்கள் எண்ணத்தில் உயர்ந்து வருகிறார் அண்ணாதுரை!

பதவிகள் பெரிய மனிதர்களை மேலும் 'பெரிய'வர்களாக்குகின்றன! 'சிறிய'வர்களை இன்னும் சிறியவர்களாக்குகின்றன!

பெரிய பதவியில், 'சிறியவர்'கள் பலர் இருந்திருக்கின்றனர்; ஆனால் அவர்களெல்லாம் பொதுமக்கள் பார்வையில் இன்னும் சிறியவர்களாகத்தான் மாறியிருக்கிறார்கள்!

திரு. அண்ணாதுரை, அப்படிப்பட்டவர்களின் இனத்தைச் சார்ந்தவரல்லர்! ஆட்சியில் அவர் இருக்கும் வரையில், தமிழ்நாட்டைப் பற்றி நல்லவர்கள் யாரும் கவலைப்படத் தேவையில்லை!

இத்தனை நாள் ஆண்டவர்களுக்கு (காங்கிரசுக்காரர்களுக்கு), பதவி போனதால் ஒரு விரக்தியும் குழப்பமும் தோன்றுவது இயற்கையே! மக்கள் மனத்திலிருந்து இன்னும் முழுமையாக மறையாமல் இருக்கவேண்டுமானால், அவர்கள், இனியாவது பொறுப்பை உணர்ந்த வகையில் செயல்பட வேண்டும்!

சனநாயகத்தில், 'எதிர்ப்பது'தான் எதிர்க் கட்சியின் வேலை; ஆனால் அந்த எதிர்ப்பு, ஆதாரத்துடனும் புள்ளிவிவரத்துடனும் இல்லாவிட்டால், எதிர்ப்பவரையே தாக்கும்!

"தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் நாட்டில் சட்டமும்—அமைதியும் இருக்காது" என்ற (காங்கிரசு) பிரச்சாரத்தையும் மீறித்தான் மக்கள், ஆட்சியில் அமரத்தக்க வகையில் அக்கட்சிக்குப் பெரும்பான்மை எண்ணிக்கை பலத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

தி. மு. க.-வின் ஏழு மாத கால ஆட்சிக்கு அத்தாட்சி வழங்கும் வகையில், 'அண்ணா அமைச்சரவையின் நிர்வாகம், நம்பிக்கை—தோழமை—நேர்மை ஆகியவைகளுக்கு இலக்கணமாய்த் திகழ்கிறது' என்று இராஜாஜியே கூறிவிட்டார்!

"தெருச்சண்டைகளால், நாடு முழுவதிலும் அமைதி கெட்டுவிட்டதாக ஆகாது" என்று சுருக்கமாகக் கூறிப் பதிலளித்துள்ள முதலமைச்சரின் விளக்கம் சரியானதாகவே தோன்றுகிறது; ஏனெனில், இந்தியா முழுவதிலும் உள்ள மாநிலங்களில் தமிழ் நாட்டில்தான் அமைதியும், சட்டமும் கெடாமல் இருக்கின்றன! தெருச் சண்டைகளையொத்த பூசல்களுக்குச் சட்டம், அவ்வப்போது உரிய பரிகாரங்களை மேற்கொண்டு வருகிறது.

இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், தெருச்சண்டைகளையொத்த பூசல்களைக் காட்டி, 'தமிழ் நாட்டில் சட்டமும், அமைதியும் குலைந்துவிட்டன' எனக் கூறுவது, பொருளற்ற பேச்சாகும்!"

—28—9—67 'மெயில்' தலையங்கத்தின் முக்கிய கருத்துப் பகுதிகள்.

# பள்ளிக்குப் போன பிள்ளை சுள்ளி பொறுக்குகிறது!

**நல்லவர்—வல்லவர்!**
**போகும் இடமும் பொருத்தமானது!**
**பெறுகின்ற பதவியும் தமிழகத்துக்கு ஆதாயமானதே!**

என்றெல்லாம் எல்லோராலும் ஏத்திப் புகழப்பட்டு வழியனுப்பப்பட்ட தமிழகத்தின் முன்னாள் தொழில் அமைச்சர் வெங்கட்ராமன், அங்கே—புதுடில்லியில் என்ன செய்கிறார் தெரியுமா?

"திட்டக் குழுவில் வேலை பார்க்கிறார்" என்பார்கள்!— நாட்டு நடப்பு தெரியாதவர்கள் புரிந்துகொண்டது அது!

**கட்சி வேலை பார்க்கிறார்! அதிலும் குறிப்பாக, காமராசருக்குப் பக்கபலமாக இருந்து காரியமாற்றுகிறாராம்!**

'எனக்குப் பின் என் பெயரைச் சொல்பவன்' என்று சொல்வார்களல்லவா—அதுபோல், காமராசர் இல்லாத வேளையில், புதுடில்லியில் உள்ள காமராசர் வெங்கட்ராமன்தானாம்!

**கல்கத்தா காங்கிரசுபற்றி நந்தா திட்டம் எழுப்பியுள்ள அரசியல் புழுதியில், அமைதி ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறாராம் திட்டக் குழுவின் முழுநேர ஊழியரான வெங்கட்ராமன்!**

'விஞ்ஞான பவன'த்தில் வேலை பார்ப்பவருக்கு காங்கிரசு விவகாரத்தில் என்ன வேலை?'

என்று வினவி, வங்காளத்துக் கோஷ்டித் தலைவர்கள் கோதிப்படைந்திருப்பதாகத் தெரிகிறது!

'திட்டத்துக்கு ஓய்வு--ஓய்வு' என்று பேசிக் கொள்கிறார்களே—அதனால், அங்கே வேலையில்லாமல் கட்சி வேலையைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார்போலும்!

# தி.மு. கழகப் பொதுக்குழு

## அக். 14, 15-ல் சென்னையில் நடைபெறும்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம், 1967 அக்டோபர் 14, 15 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் சென்னை—தியாகராயநகர், அபிபுல்லா ரோடு, 11/1 எண்ணுள்ள எஸ்.ஜி.எஸ். சபா திருமண மண்டபத்தில் நடைபெறும்.

அன்பன்,
**அண்ணாதுரை,**
பொதுச்செயலாளர், தி.மு.க.

'அறிவகம்'
சென்னை-13
27—9—67

# தென் சென்னை இடைத் தேர்தல்

## நவம்பர் 3-ம் நாள் வாக்குப் பதிவு

புதுடில்லி, செப். 28— தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெறுவதற்கான நாட்கள் தேர்தல் ஆணைக் குழுவால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 3-ம் நாள் வாக்குப் பதிவு நடைபெறும்.

வேட்பு மனுத் தாக்கல் செய்யும் கடைசி நாள் அக்டோபர் 7 ஆகும்.

அக். 9-ம் நாள் வேட்பு மனுக்கள் ஆய்வு செய்யப்படும்.

வேட்பு மனு திரும்பப் பெறக் கடைசிநாள் அக். 13.


## நாளை

# வண்ணையில்

### நேற்று இவர்



### சொன்னது பற்றி

# 'நம் நாடு'

நாளை இதழில் பாருங்கள்





'டைம்ஸ் ஆப் இந்தியா' இலட்சுமண், நன்றாகப் போட்டிருக்கிறார் அப்படத்தை—அதாவது, ஒரு நவீன ஷேக்ஸ்பியர் நாடகத்தின் உச்சக் கட்டத்தை!

சீசரைப் புறமுதுகில் குத்துவதற்காக, காஷியஸ் தயாராக இருக்கும்போது, 'கொஞ்சம் நில்; இந்த சூழ்ச்சிக்கு உத்தரவு கொடுத்தது யார்?' என்று கேட்கப்பட்டிருந்தால் எப்படி இருக்குமோ அப்படி—அதுல்யாவின் பின்னால்—'கட்சிக் கலைப்பு' என்னும் ஆயுதத்தால் குத்தப்போகும் நந்தாவை, காமராசர் தடுத்து, 'ஒரு நிமிடம் நில்; யார் கொடுத்தது இந்த உத்தரவு?' என்று காமராசர் கேட்பது போல்—ரோமானியப் பின்னணியில் வரைந்திருக்கிறார், அந்தப் பிரபல ஓவியர்!

சூழ்ச்சி வெளியாக்கப்படுவதற்காக அல்ல—காமராசரின் 'நிலை' இந்த 'அள'வில் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகவே அந்தக் கார்ட்டூன்!

அவர் 'கௌரவம்' இப்படி இருக்கும்போது, தூத்துக்குடியில் சுற்றுப்பயணத்தில் இருக்கும் அவரைப் போய், 'கல்கத்தா பற்றி ஏதாவது சொல்கிறீர்களா?' என்று நிருபர்கள் கேட்பது, ஒரு வகையில் கேலி செய்வது போலத்தான் இருக்கிறது!

கட்சித் தலைவர் தேர்தலுக்கு முன் மேல்மட்டத்தில் ஒரு கலகலப்பை ஏற்படுத்தி விட்டார் இந்திரா!

'தெளிந்த குட்டையில் மீன் பிடிக்கலாம்' என்றிருந்தார் காமராசர்!

தேனடையில் கையை வைத்து ஒரே ரீங்காரத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார், இந்திரா!

'அத்திப் பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தை' என்பதைப்போல் 'அழுக்கும் அவலமும் இங்கேயும்தான் இருக்கிறது; எங்கே நந்தாக்கள்—அனுப்பிவையுங்கள்' என்று மாநிலத்துக்கு மாநிலம் அதுல்யா கோஷுக்கள் கேட்கிறார்களாம்! பீகார் இதில் முதல் வரிசையில் நிற்பதாகக் கேள்வி!

வங்காளத்துக் கட்சிக் கலைப்பில் சம்பந்தப்பட்டிருப்பவர்களையெல்லாம் ஒரு முறை பாருங்கள்—

### நந்தா--இந்திரா--அதுல்யாகோஷ்!

கட்சித் தலைவர் தேர்தலுக்கு ஏதோ ஒரு வகையில் பலமாக அடிபடும் பெயர்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

பென்சில்வேனிய

# பல்கலைக்கழகத்தில் இரா. செழியன்

## கருத்தரங்கில் சிறப்புரை

பிலடல்பியா, செப். 24—

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இங்கு வந்துள்ள 'நம் நாடு' ஆசிரியர் இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள், பென்சில்வேனிய பல்கலைக்கழக அரசியல் படிப்புச் சார்பில், கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டார்.

பல்கலைக் கழகப் பேராசிரியர் நார்மன் டி. பால்மர் கூட்டத்தைத் துவக்கி, தோழர் இரா. செழியன் அவர்களை அறிமுகப்படுத்திவைத்தார்.

"தெற்கு ஆசியாவில் அரசியலும் அரசாங்கமும்" என்ற தலைப்பில், தோழர் செழியன் கருத்துரை வழங்கினார்.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், சொற்பொழிவின் இறுதியில் கேட்ட கேள்விகளுக்குத் தோழர் செழியன் தக்க பதில் தந்தார்.

இரவு, பல்கலைக்கழகத்திலுள்ள இந்திய மாணவர்கள் அளித்த சிறு விருந்தில் தோழர் செழியன் கலந்துகொண்டார்.

பிலடல்பியா நகரிலுள்ள பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தில் 19 ஆயிரம் மாணவர்கள் உள்ளனர்.

# காமராசர் கூற்று கலகலக்கிறது!

சென்னை, செப். 27—

"'கல்விக்காக இவர்கள் ஒன்றும் செய்யவில்லை' என்று காமராசர் சொல்கிறார். காமராசருக்கு இருக்கிற அக்கறை அண்ணாவுக்கு இருக்காதா? எனக்கு இருக்காதா?

"பக்தவத்சலம் ஆட்சிக் காலத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 44 கோடி; இந்த ஓர் ஆண்டுக் காலத்துக்கு அண்ணா அவர்கள் ஒதுக்கியிருக்கின்ற தொகை ரூ. 54 கோடி.

"ஓராண்டுக் காலத்துக்கு மட்டும் பத்து கோடி ரூபாய் அதிகம்; எப்படிப்பட்ட சூழ்நிலையில் அண்ணா அவர்கள் இந்தத் தொகையை ஒதுக்கியிருக்கிறார்?—படி அரிசித் திட்டத்தால் ஏற்படும் நட்டத்தை—புஞ்சை நிலங்களுக்கு அளிக்கப்பட்ட வரி விலக்கினால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொண்டு—'கள்ளுக் கடைகளைத் திறந்தால் ரூ. 15 கோடி வரை வருமானம் வரும்' என்று தெரிந்தும் அதைச் செய்யாமல்—கல்விக்காக அதிகம் ஒதுக்கியுள்ளார்கள்.

"இந்த ஆண்டு மட்டும் பத்துக் கல்லூரிகள்—75 உயர்நிலைப் பள்ளிகள்—700-க்கும் மேற்பட்ட துவக்கப் பள்ளிகள் புதிதாக துவக்கப்பட்டுள்ளன.

"இங்கே காமராசர், 'கல்வியிலே ஒன்றுமே செய்யவில்லை' என்று பேசுகிறார். இதை நாடு நம்புமா? நீங்கள் சொல்லியதை இதுவரை நாடு நம்பியதா? இனிமேல் நம்புமா?"

—அமைச்சர்

**இரா. நெடுஞ்செழியன்**

(70-வது வட்டக் கூட்டத்தில்)

விருந்துக் கட்டுப்பாடு

# முதலமைச்சர் அண்ணா

## இதயங்கனிந்த வேண்டுகோள்

விருந்துக் கட்டுப்பாட்டைக் கடைபிடிக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:—

"நாடு முழுவதிலும் அரிசி நிலைமை கடுமையாக இருப்பதையும், தமிழகத்தைப் பொறுத்த வரையில் பகிரங்க மார்க்கெட்டில் அரிசி ஒழுங்காகக் கிடைக்காத இடங்களில் அரிசி வழங்குவதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துவருவதையும் பொதுமக்கள் அறிவர்.

"பற்றாக்குறை நிலவும்பொழுது, சமூக அல்லது சமய நிகழ்ச்சிகளில் உணவில் ஆடம்பரத்தைக் கடைபிடிப்பது பாதகத்தையே விளைவிக்கும்; அதைத் தவிர்க்க வேண்டியது நம் அனைவரின் கடமையும் ஆகும்! இப்போதைக்கு நாம் இந்தத் தியாகத்தையாவது செய்துதானாக வேண்டும்.

"திருமணம், ஈமச்சடங்கு ஆகிய நிகழ்ச்சிகளில் 100 பேருக்கும், மற்ற நிகழ்ச்சிகளில் 50 பேருக்கும் அதிகமாக உணவளிக்கக் கூடாது—என்று, தமிழக விருந்தினர் கட்டுப்பாடு உத்தரவு விதிக்கிறது; இந்த வரம்பை மீறி நடந்துகொள்ளாதிருக்குமாறு நான் அனைவரையும் இதயங்கனிந்து கேட்டுக்கொள்கிறேன்.

"இவை போன்ற நிகழ்ச்சிகளில் தானியம் அல்லாத பண்டங்களின் உபயோகத்திற்கு இப்பொழுது கட்டுப்பாடு எதுவும் கிடையாது; எனினும், நாடு எங்கணும் மக்கள் அல்லல்படும் இத்தருணத்தில், தமிழகத்தில் நாம் மட்டும் ஏராளமாகச் சேர்ந்து உண்பது சரியன்று!

"சட்ட விதிகளைக் கடுமையாக்குவதால் அதிக பலன் விளைந்துவிடாது என்பதை நான் முற்றிலும் உணர்ந்துள்ளேன்!

"இந்த வேண்டுகோளுக்கு மக்கள் அனைவரும் செவிமடுத்து — 'அரசு பிறப்பிக்கும் சிக்கன உத்தரவு சிராகக் கடைபிடிக்கப்படுவதில்லை' என்ற கருத்து ஏதேனும் நிலவுமானால்—அது முற்றிலும் நீங்க உதவுவர் என நம்புகிறேன்."

# பெர்லின்!

இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

## நீண்ட சுவர்!

ஜெனிவாவிலிருந்து பெர்லின் நகருக்கு எல்லா விமானங்களும் நேரடியாகப் பறந்து செல்வதில்லை. பெர்லின் நகரை அணுக, கிழக்கு ஜெர்மனிமீது பறந்து செல்ல வேண்டியுள்ளது. அதற்கு, அனுமதி பெற்ற சில விமானங்கள் மட்டுமே பெர்லின் நகருக்குச் செல்கின்றன!

ஜெனிவா நகரிலிருந்து பிராங்க்பர்ட் வரையில், 'சுவிஸ் விமானம்' மூலம் சென்று, அங்கிருந்து வேறொரு விமானத்தில் ஏறி பெர்லின் நகரை—அதாவது, மேற்குப் பெர்லின் நகரை—நான் அடைந்தேன்.

ஜெர்மன் நாடு இரண்டு பகுதிகளாக—'மேற்கு ஜெர்மனி', 'கிழக்கு ஜெர்மனி' என்று—பிரிந்துள்ளது. பெர்லின் நகரும், 'மேற்கு—கிழக்கு' என்று இரண்டாக ஆக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது உலகப் போருக்குப் பின், ஜெர்மன் நாடு நான்கு பகுதிகளாகப் பிரிந்து, இரஷ்யா – அமெரிக்கா – பிரிட்டன் – பிரெஞ்சு ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. 1949-ல், அமெரிக்கா – பிரிட்டன் – பிரெஞ்சுப் பகுதிகள், ஜெர்மன் குடியரசுக் கூட்டாட்சியின் தனிப்பட்ட அரசு ஆனது!

இரஷ்ய ஆதிக்கத்தில் இருந்த கிழக்கு ஜெர்மனி, 'ஜெர்மன் சனநாயகக் குடியரசு' என்று தனியாக ஆனது!

அதேபோல் பெர்லின் நகரும், நான்கு வல்லரசுகளின் ஆதிக்கத்தின்கீழ் பிரிந்திருந்து, இப்பொழுது, 'கிழக்குப் பெர்லின்'—'மேற்குப் பெர்லின்' என்று பிரிக்கப்பட்டுள்ளது.

'பிரிக்கப்பட்டுள்ளது' என்றால், இப்பொழுது நீண்ட சுவர் வைத்து, இரண்டு பகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன!

நான் ஒரு சனிக்கிழமை மாலை 3-30 மணிக்குச் சென்று, திங்கட்கிழமை காலை 9-மணிக்குப் பெர்லின் நகரைவிட்டுத் திரும்பிவிட்டேன். இந்தக் குறுகிய காலத்தில், ஓரளவுதான் என்றால் அங்குள்ள நிலைமைகளைப் பார்க்க முடிந்தது!

விமான நிலயத்தில் இறங்கியதும், இந்தியத் தூதுவரகத்தைச் சேர்ந்த ஒருவர் என்னை வரவேற்க வந்திருந்தார். மேற்கு ஜெர்மன் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒருவரும் வந்து—என்னை அடையாளம் கண்டு — அரசாங்க விருந்தினராக என்னை அழைத்துச் சென்றார். நான் தங்கியிருந்த இரு நாட்களும் விடுமுறை நாட்களானதால், நகரம் அமைதியாக இருந்தது.

மேற்கு பெர்லினில் முக்கிய வீதிகளைப் பார்த்ததும், பெர்லின் சுவரைப் பார்த்தேன். சில இடங்களில், ஒரு பெரிய வீதியின் குறுக்கே அந்தச் சுவர் செல்கிறது—சில இடங்களில், வீடுகளின்மேல் அந்தச் சுவர் இருக்கிறது! பாதியாகப் பிரிந்த இல்லங்களும் அங்கு உள்ளன!

அங்குள்ள 'பாட்ஸ்டமர்' என்ற பகுதி, போருக்கு முன்பு முக்கிய கடை வீதியாக இருந்ததாம். சுவருக்கு இந்தப் பக்கம், வேடிக்கை பார்ப்பதற்காக உயர்ந்த மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன; அதில் ஏறிநின்று பார்த்தால், சுவருக்கு மறுபுறம் தெரிகிறது. சுவரை அடுத்து—கிழக்கு பெர்லின் பக்கத்தில்—இரண்டு முள் வேலிகள் உள்ளன; ஆங்காங்கு கண்காணிப்பு காவல்மேடைகள் உள்ளன; அதில், கிழக்கு ஜெர்மனி போர் வீரர்கள் காவல்காத்து நிற்கின்றனர்!

பாட்ஸ்டமர் பகுதியில் முக்கியமான சில இடங்கள் உள்ளன; அங்குள்ள ஓர் பகுதியில், மண்மேடு ஒன்று இருக்கிறது; அந்த இடம்தான் இட்லர் தற்கொலை செய்துகொண்ட இடமாம்!

மண்மேட்டுக்குக் கீழே சுரங்கப் பாதை அமைத்து, கீழேயிருந்த அறைகளில் இட்லர், கடைசியாக இருந்தான்; தவிர்க்கமுடியாத தோல்வி பெர்லின் நகரை நோக்கி நான்கு பக்கத்திலிருந்து நெருக்கியதும், அந்தக் கீழ் அறையில் தற்கொலை புரிந்துகொண்டான்! அந்த மண்மேடு அருகே யாரும் செல்ல அனுமதிப்பதில்லை! சுற்றிலும் முள் கம்பி காவல் இருக்கிறது!

மண்மேட்டுக்கு மேல் உள்ள வெள்ளை மாளிகையில், கொயபெல்ஸ் இருந்தான்! அதை அடுத்து இடபுறமாகக் காணப்படும் மாளிகையில் தளபதி கோயரிங் வாழ்ந்தான்!

உலகப் போரில் ஏற்பட்ட அழிவுகள் அநேகமாக நீக்கப்பட்டுவிட்டன! உயர்ந்த கட்டிடங்களும், அகன்ற சாலைகளும், அமெரிக்க மாதிரியில் கட்டப்பட்டுள்ளன! போரின் நினைவுச் சின்னம்போல் ஒரு மாதா கோயிலின் இடிந்த மேல் பகுதி இருக்கிறது. அது தவிர, போரின் சிதைவுகள் நீங்கி, புதிய பெர்லின் உருவாகியிருக்கிறது.

1950-லிருந்து மேற்கு ஜெர்மனியின் தொழில் வளர்ச்சி மிக வேகமாக முன்னேறியுள்ளது; 6 பங்கு அதிகமான அளவு உற்பத்தி பெருகியுள்ளது. இரும்பு உற்பத்தியில் ஐரோப்பாவில் ஜெர்மன் நாடு முதலிடத்தைப் பெற்றுவிட்டது! போரில் ஏற்பட்ட அழிவுகளை நீக்கிப் புதிய நகரங்களையும் தொழில்களையும் உண்டாக்கிக் கொண்டதல்லாமல், போரினால் ஏற்பட்ட கடன்களையும் பெரும்பாலும் அடைத்துவிட்டது! ரூ 1,600 கோடி அளவுக்கு இருந்த கடனில், இப்பொழுது ரூ. 50 கோடிக்கும் குறைவாகத்தான் பாக்கியுள்ளது! அமெரிக்காவின் உதவி ஏராளமாகக் கிடைத்ததாலும்—அதை நன்கு பயன்படுத்தி—அந்த நாடு எழுச்சி பெற்றுவிட்டது!

ஜெர்மனியில் உருவாக்கப்படும் பென்ஸ், போக்ஸ்வாகன் போன்ற கார்கள் உலகமெங்கும் விரும்பி வாங்கப்படுகின்றன! தளராத உழைப்புதான் முக்கியக் காரணமென்று கூறலாம்!

நான் தங்கியிருந்த மறுநாள் காலையில், கிழக்குப் பெர்லின் நகருக்குள் சென்றேன். மேற்குப் பெர்லினிருந்து கிழக்குப் பெர்லினுக்குச் செல்ல மூன்று முக்கிய நுழைவு வாயில்கள் இருக்கின்றன. நமது 'பாஸ்போர்ட்'டைக் காண்பித்து அனுமதி கேட்டால், ஒரு பகல் தங்கிவர அனுமதி தருகிறார்கள்! செல்கின்ற கார்களை—நான் ஒரு காரை அமர்த்திக் கொண்டு சென்றேன்—உள்ளும் புறமும் நன்கு பரிசோதனை செய்து அனுப்புகிறார்கள்!

செல்லும்பொழுது, மேற்கு ஜெர்மனி நாணயமான மார்க்கில், 5 மார்க்குகளை கிழக்கு ஜெர்மனி மார்க் நாணயமாக மாற்றிக்கொண்டு செல்லவேண்டும். அதைக் கிழக்குப் பெர்லினில் செலவு செய்துவிடவேண்டும்.

கிழக்குப் பெர்லினில் இரஷ்யர்களின் நடமாட்டம் அதிகம் தெரிகிறது; இரஷ்யப் பிரயாணிகள் அதிகம் வந்துபோகிறார்கள்!

போரில் இறந்த இரஷ்ய வீரர்கள் புதைக்கப்பட்ட இடம் ஒன்றிருக்கிறது. அந்த இடத்தில் பெரிய அளவில் ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. ஓர் இரஷ்ய வீரன் வலது கையில் வாளையும், இடது கையில் ஒரு ஜெர்மன் குழந்தையையும் தாங்கிக்கொண்டு நிற்பது போன்று ஒரு பெரிய சிலை அமைக்கப்பட்டுள்ளது. அந்த வெண்கலச் சிலையின் உயரம்—கீழே உள்ள பீடத்தையும் சேர்த்து—110 அடி உயரம் இருக்கிறது. சிலை மட்டும் 50 அடி இருக்கும். சிலை, பார்ப்பதற்குக் கம்பீரமாக இருக்கிறது!

சிலையின் இரு பக்கத்திலும், லெனின்—ஸ்டாலின் ஆகியோரின் பொன்மொழிகள் பொறிக்கப்பட்ட கற்கள் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளன!

இரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர்களும், இரஷ்யப் போர் வீரர்களும் ஏராளமாக இங்கு வந்து மலர் வளையங்கள் வைத்தும், அஞ்சலி செய்தும் போகிறார்கள்!

பிற்பகல், 'மாஸ்கோ ஓட்டல்' என்ற இடத்தில் நானும் என்னுடன் வந்தவரும் சாப்பிட்டோம். இரஷ்ய உணவு வகைகளும், இரஷ்யப் பானமான ஒட்காவும் அங்கு கிடைக்கின்றன; அவற்றில் நான் சாப்பிட்டது, வேக வைத்த உருளைக்கிழங்கு—கீரை—தக்காளிச் சாறு—தண்ணீர்!

கிழக்குப் பெர்லினிலும் பெரிய கட்டிடங்களைக் கட்டி வருகிறார்கள். நான் சென்றது ஞாயிற்றுக்கிழமையானதால், கடை வீதி மூடிக்கிடந்தது—மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்படவில்லை.

கிழக்குப் பெர்லினில் பழங்காலப் பொருள்களை உடைய பெரிய கண்காட்சிகள் சில இருக்கின்றன. 'மியூசியம் தீவு' என்ற இடத்தில், பழைய கண்காட்சி—தேசியக் கண்காட்சி—பர்கமான் கண்காட்சி—போடே கண்காட்சி—என்று, பல கண்காட்சிகள் இருக்கின்றன. பாபிலோனிய நாகரிகக் காலத்து கட்டிடங்களிலிருந்து 19-வது நூற்றாண்டு ஓவியம்வரை 5,000-க்கு மேற்பட்ட காட்சிப் பொருள்கள் அங்கு உள்ளன.

(3-ம் பக்கம் பார்க்க)

# வங்கத் தலைநகரில் அண்ணா பிறந்த நாள் விழா

## தென்னிந்திய சங்கங்கள் இணைந்து கொண்டாடிய மாட்சி

கல்கத்தா—அவுராவில் இயங்கும் வங்கத் தமிழர் சங்கச் சார்பில் 24—9—67 அன்று பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கல்கத்தா வரலாற்றில், கல்கத்தா—அவுராவில் இயங்கிவரும் 11 தென்னிந்தியச் சங்கங்கள் பங்கு கொண்ட விழா இதுதான் முதலாவதாகும்.

புகழ் பெற்ற தமிழ்ப் பாடகர் 'இசைத் தென்றல்' முத்து, பாவேந்தர் பாரதிதாசனாரின் தமிழ் மொழி வாழ்த்துப் பாட—திரு. மா. கருப்பையா விழாவில் பங்கு கொள்ள வந்திருந்த பல்வேறு அமைப்புகளின் பேச்சாளர்களையும், தமிழ் இலக்கிய வல்லுநர்களையும், விழாவிற்கு பெரும் திரளாக வந்திருந்த மக்களையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவிற்கு சங்கத் தலைவர் திரு. டி. என். தங்கதுரை தலைமைவகித்தார்; அவர், தம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் இலக்கியத்திற்கு அண்ணா அவர்கள் ஆற்றிய தொண்டு மகத்தானது. சாதி—மத வேறுபாட்டைப் போக்க அண்ணா அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சிகளும், செயலாற்றல்களும், மதுவிலக்குக் கொள்கையில் அறிஞர் அண்ணா அவர்களின் உறுதியான கொள்கையும், தமிழ் நாட்டில் விலைவாசிகளைக் குறைக்க அண்ணா அவர்கள் செய்து வருகிற முயற்சிகளும் வியந்து பாராட்டத்தக்கன.

சேலம் இரும்புத் தொழிற்சாலை, தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் முதலியன ஏற்படுத்தி தமிழ்நாட்டைத் தொழில்மயமாக்க அண்ணா பெருமுயற்சி செய்கிறார்.

சென்னை நகரில் ஓடும் கூவம் ஆற்றை உல்லாசப் பயணம் செய்யக்கூடிய அளவிற்கு ஆக்க இருப்பதும், காவிரி நீரை சென்னை நகருக்குக் கொண்டுவந்து குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க ஆவனசெய்து வருவதும், பஸ் கட்டணங்களைக் குறைத்தும், தமிழ் நாடகத் துறையின் வளர்ச்சிக்கு சினிமா எடுக்கும் அதிபர்கள் பொருளுதவி செய்யவேண்டுமென்ற அண்ணாவின் வேண்டுகோளும், தமிழ்நாட்டில் அதிகமான கல்லூரிகளைத் துவங்க பொதுமக்கள் ரூ. 5 இலட்சம் திரட்டினால் தமிழக அரசு மேலும் ரூ. 25 இலட்சம் செலவு செய்து எத்தனை கல்லூரிகள் வேண்டுமென்றாலும் அமைக்கத் தயார் என்ற அறிவிப்பும், மொழிப் பிரச்சினையில்—இந்தியாவில்–தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கிவிட முயற்சிக்கும் ஏற்பாடுகளை உறுதியுடன் எதிர்ப்பதும் பாராட்டுக்குரியவை.

மதுரை பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் அண்ணா ஆற்றிய உரை இன்று இந்திய மக்கள் அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்றுவிட்டது.

இதுவரையில் வடநாட்டு வரலாற்றில் எந்தத் தமிழக முதலமைச்சருக்கும் விழா எடுக்காது இன்று அண்ணா அவர்கட்கு வங்கத் தமிழர் சங்கம் முதன்முதலாக அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடியது சிறப்புக்குரியதாகும்.

அண்ணா தமிழக முதலமைச்சர் மட்டுமல்லாமல், பல்வேறு சிறப்புகளும் உடையவராக இருக்கிறார்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதல்வராக இருப்பது தமிழ்த் தாயே அரியணையில் அமர்ந்திருப்பதுபோல் உள்ளது."

### தமிழ் மாணவர்கட்கு அன்பளிப்பு

"இந்நகரில் உள்ள இராமகிருஷ்ண மிஷனில் படிக்கும் தமிழ் மாணவர்களுக்கு வேண்டிய தமிழ் இலக்கியப் புத்தகங்களை வங்கத் தமிழர் சங்கம் அன்பளிப்பாக அளிக்கும்" என்று சங்கத் தலைவர் டி. என். தங்கதுரையால் தெரிவிக்கப்பட்டபோது, திரண்டிருந்த மக்கள், மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தனர். 'தென்னிந்திய சங்கங்கள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும்' என்று அவர் கூறினார்.

இவ்விழாவில் 11 தென்னிந்திய சங்கங்கள் சார்பாகவும், திரு. ஜே. இராஜாத்தி எம்.ஏ., திரு. மலேசியா கிருஷ்ணன் எம்.ஏ., திரு ப.ந தியாகராசன் போன்ற தமிழ் இலக்கிய வல்லுநர்களும் ஆக மொத்தம் 25 பேர் அண்ணா அவர்களை வாழ்த்திப் புகழ்ந்து பேசினர்.

அண்ணா பிறந்தது முதல் இன்று வரையில் உள்ள அவர் வாழ்வின் திருப்பங்களை ஓவியர் அண்ணாமலை அவர்களின் அழகுச் சித்திரங்கள், விழா நடந்த மன்றத்தை அலங்கரித்தன.

விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் இனிப்பும், மலர்களும் வழங்கப்பட்டன.

சங்கச் செயலாளர் நன்றி கூற—திரு. இராதாகிருஷ்ணன் நாட்டு வாழ்த்துப் பாட—விழா இனிது முடிந்தது.

# நிர்வாகச் செலவுகளைக் குறைக்க நடவடிக்கை

## காங்கிரசல்லாத ஆட்சியின் சிக்கன--சீரமைப்புத் திட்டம்

போபால், செப். 29—

அரசுத் துறைகளைச் சீரமைப்பது—சில தனியார் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் மானியத்தைக் குறைப்பது—மேம்பாட்டைச் சேராத திட்டப் பணிகளைக் கிடப்பில் போடுவது—ஆகியன, காங்கிரசல்லாத மத்தியப் பிரதேச அரசு நிர்வாகச் செலவைக் குறைக்க எடுத்துக் கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளில் சிலவாகும்.

பொதுப் பணித் துறையின் சாலையமைப்பு-பாசன வசதிப் பிரிவுகளும், பொது சுகாதார அமைச்சகத்தின் சுகாதாரப் பொறியியல் பிரிவும் பொதுப் பணித் துறையில் ஒன்றிணைக்கப்படலாம்; மற்றும் மீன்வளம், கால்நடை மருத்துவம், மொழிகள், சுற்றுலா, எடை—அளவு, சமூக நலம் ஆகிய துறைகளும் இணைக்கப்படலாம்.

இச்சீரமைப்பினால் வேலையிழக்கும் பல ஊழியர்கள் இதர துறைகளில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படுவர்; ஆட்குறைப்பு இருந்தாலும் அது சிறு எண்ணிக்கையில் இருக்கும்.

மானியத் தொகையைக் குறைப்பது அல்லது நிறுத்துவதால் பாரத சேவக் சமாஜம், கதர்—கிராமத் தொழிற் கழகம், ஊராட்சிப் பயிற்சிக்கூடங்கள், சமூக நல—தொழிலாளர் நல அமைப்புகள் ஆகியன பாதிக்கப்படலாம்.

புதிய பதவிகளை உருவாக்குவதில்லையென்பதில் நீதித் துறை உறுதியாக இருக்கிறது.

# செங்கல் பற்றுக்குறையைத் தவிர்க்க மாற்று ஏற்பாடு

## ரூ. 2 கோடி செலவில் புதுவகை செங்கல் தொழிற்சாலை

சென்னை, செப். 28—

சென்னைக்கருகிலுள்ள எண்ணூரில் புரைச்செங்கல் ஆலையொன்றை நிறுவும் பணியில் தமிழக வீட்டு வசதிக் கழகத்தின் தொழில் நுட்பக் குழு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது.

தமிழக வீட்டு வசதிக் கழகத்தின் புதிய தலைவரான ஆர். பூவராகமூர்த்தி, அத்தொழிற்சாலைக்கு வேண்டிய இயந்திரங்களை வாங்குவது குறித்து இப்போது போலந்தில் பேச்சு நடத்திவருகிறார்.

போலந்துத் தயாரிப்பாளர்களின் 'பைப் புராடக்ஸ்' என்ற கூட்டு நிறுவனம், அந்த ஆலையை அமைக்கவும், புரைச் செங்கல்—தட்டோடு போன்றவற்றைச் செய்வதற்குத் தமது நுட்பத் தொழிலாளரை அளித்தும் தமிழக அரசுக்கு உதவும்.

செங்கல் பற்றுக்குறை இப்போது இருப்பதாலும், கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்து செல்வதாலும், செங்கலுக்குத் தகுந்த மாற்றுப் பொருளை பற்றி வீட்டு வசதிக் கழகம் சிந்திக்க வேண்டியதாயிற்று; அது, அயல்நாட்டுக் கட்டுமான வல்லுநர்களை விசாரித்ததில் புரைச் செங்கல், செங்கல்லுக்குச் சரியான மாற்று என்பதை அறிந்தது.

எண்ணூரில் செய்யப்படும் புரைச் செங்கற்கள், சாதாச் செங்கற்களுக்கு மாற்றுவதுடன்—கட்டுமானத் தொழிலின் தேவை மிகுந்துவிட்டதால் செங்கல் வரத்துப் பற்றுமலிருக்கிறது—கட்டுமான முறைகளில் பெரும் அளவிற்குப் புரட்சியை ஏற்படுத்திவிடும் என்று தொழில் நுட்பக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

புரைச் செங்கல்லை வேண்டிய அளவிற்குச் செய்துகொள்ளலாம்; அது உறுதிவாய்ந்தது; சாதாச் செங்கல்லைவிட இரண்டு மடங்கு கனத்தைத் தாங்கும். அது வழவழப்பாயிருக்கும்; ஒரே சீராயிருக்கும்; அதனால் கட்டுமான வேலை நேரம் மிச்சமாகும்; செலவு சுருங்கும்; ஏனெனில், புரைச் செங்கல்லை வைத்துக் கட்டப்படும் கட்டடங்களில் சாந்துப் பூச்சு வேலை செய்ய வேண்டியதில்லை.

தமிழக வீட்டு வசதிக் கழகம் எண்ணூரில் தனது நிலத்தில் கட்டும் இத்தொழிற்சாலைக்குச் சுமார் ரூ. 2 கோடி செலவாகும் என்று மேற்சொன்ன அதிகாரி கூறினார். மத்திய அரசு இதற்காகும் பணத்தை, மாநில அரசுக்குக் கடனாகத் தர முன்வந்துள்ளது.

அத்தொழிற்சாலை வேலை சுமார் 18 மாதங்களில் முற்றுப்பெற்று 1969 நடுவில் வேலை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அது ஒரு நாளில், 500 கன அடிப் புரைச் செங்கற்களைச் செய்யும். அங்கு செய்யப்படும் புரைச் செங்கற்களில் 60 சதவிகிதத்தை வீட்டு வசதிக் கழகம் தனது கட்டுமான வேலைகளுக்கு எடுத்துக் கொண்டு, எஞ்சுவதைப் பொது மக்களுக்கு விற்றுவிடும்.

புரைச் செங்கல்லைச் செய்வதற்கு எளிதாகக் கிடைக்கும் சுண்ணாம்பும், மணலும் மூலப் பொருட்களாகும். இச்செங்கல் வந்துவிட்டால், சிமெண்டின் தேவை பையப் பையக் குறைந்துவிடும்.

# 'கட்சிக்கு நிதி சேர்க்க அதிகாரிகளைப் பயன்படுத்துகிறார்'

## அமெரிக்க அதிபருக்கு எதிராகக் குற்றச்சாட்டு!

"சனநாயகக் கட்சிக்கு நிதி சேர்ப்பதற்காக அதிபர் ஜான்சனின் அதிகாரிகள் பயன்படுத்தப்படுகிறார்கள்" என்ற திடுக்கிடும் குற்றச்சாட்டினை, பிரபல அமெரிக்க நாளிதழான 'நியூயார்க் டைம்ஸ்' வெளியிட்டிருப்பதனை அடுத்து அமெரிக்க அரசியல் வட்டாரத்தில் பெரும் கருத்துப் புயல் எழும்பியிருக்கிறது!

ஜான்சனை வரவேற்றுச் சிறப்பிக்கும் ஆடம்பர விருந்தொன்றின் கட்டணமாக 500 டாலர் பெறுமான நுழைவுச் சீட்டுகளை—போக்குவரத்துத்துறை உயர் அதிகாரிகள்—தங்கள் செல்வாக்கினைப் பயன்படுத்தி—வியாபாரிகள் — நிறுவனங்கள்—பெரிய மனிதர்கள்—ஏற்றுமதி - இறக்குமதியாளர்களிடையே விற்றதாகப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றனர்!

1964-ம் ஆண்டு நடந்த தேர்தல் செலவுகளைச் சரி செய்வதற்கும், 1968-ல் நடக்க இருக்கின்ற தேர்தல் செலவுகளுக்காகவும் குடியரசுக் கட்சி, ஜான்சன் கலந்து கொள்ளும் இந்தச் சிறப்பு விருந்தினை நடத்துகிறது. (நிதி சேர்ப்பதற்காக அரசியல் கட்சிகள் விருந்து நடத்துவது அமெரிக்காவில் உள்ள வழக்கம்.)

இந்த விருந்துக்கான சீட்டுகளை விற்பதற்கு அமைச்சுத் துறை அதிகாரிகள், தங்கள் செல்வாக்கினை, கப்பல் சொந்தக்காரர்கள்—விமானக் கம்பெனி நடத்துவோர் ஆகியோரிடையே விற்பனை செய்வதனை அடுத்து இந்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

ஆனால் இந்தப் புகாரில் தொடர்புள்ள போக்குவரத்துத் துறை உயர் அதிகாரி ஆலன் பாய்ட் என்பார், 'அதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகளில் தவறேதும் இல்லை' என மறுத்திருக்கிறார்.

# மிரட்டல்!

தமிழக மாணவர்கள் மீண்டும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டால், தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபை 10,000 சத்தியாக்கிரகிகளை இந்தி ஆதரிப்புப் போராட்டத்தில் ஈடுபடுத்துமாம்!

சில நாட்களுக்கு முன்பு வெண்புருச் சேனையைப் பற்றி எழுதியிருந்த இந்தி மொழி ஏடு 'தினமான்', தனது 24—9—67 இதழில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

"தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபை ஒரு கட்டுப்பாடு வாய்ந்த அமைப்பு; இதன் கொள்கை, காங்கிரசை வலுப்படுத்துவதாக இருந்து வந்துள்ளது; அது விரும்பினால் 10,000 சத்தியாக்கிரகிகளை வேண்டுமானாலும் போராட்டத்தில் குதிக்கச் செய்ய முடியும்" என்று அது எழுதியுள்ளது.

—தகவல்: ஜி.எஸ்.

# அண்டை நாடுகள் மீது அணு ஆயுதத் தாக்கு!

## பீகிங் நடத்தினால் ஏற்படும் விளைவுகள் பற்றி ஆய்வு

சீனாவின் திடீர் அணு ஆயுதத் தாக்கிலிருந்து அமெரிக்காவைப் பாதுகாப்பதற்காகச் சங்கிலித் தொடர்போல் ஏவுகணை ஒழிப்புக் கணைகளைக் கட்டுவது என்ற அமெரிக்காவின் முடிவில் இந்தியா ஆழ்ந்த அக்கறை காட்டுகிறது.

ஆசிய நாடுகளுக்கு எதிராக சீனா செய்யும் சதிகளில், அமெரிக்காவின் முடிவு ஏற்படுத்தக்கூடிய விளைவுகளைப் பற்றிப் புதுடில்லியிலும், வாஷிங்டனிலுமுள்ள அதிகாரிகள் ஆராய்ந்துவருகின்றனர்.

சீனா தனது அண்டை நாடுகள் மீது நடத்தும் தாக்குதல்களுக்கு மேற்கத்தி நாடுகளும், இரஷ்யாவும் உண்மையான பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்குமா என்று அவர்கள் எண்ணிப் பார்க்கின்றனர்.

# அச்சுறுத்தல் மூலம் அநீதி இழைக்கத் திட்டம்!

## பிரிட்டிஷ் ஏடு கடும் கண்டனம்

பம்பாயில் 'சிவ சேனை' (சிவாஜி சேனை) என்னும் புதிய அரசியல் சக்தி தோன்றியுள்ளது பற்றி பிரிட்டிஷ் 'டைம்ஸ்' பத்திரிகை தனது தலையங்கத்தில் கவலை தெரிவித்து, 'அது எந்த அளவுக்குச் சகிப்பின்மையையும், வன்முறையையும் உண்டாக்கக்கூடும் என்பதைக் காட்டுகிறது' என்று எழுதியுள்ளது.

"பிழைப்புக்காகப் பம்பாயில் குடியேறியுள்ள ஏராளமான தென்னிந்தியர்களை விரட்டியடிப்பதே சிவ சேனையின் நோக்கம்" என்று அப்பத்திரிகை குறிப்பிட்டு மேலும் எழுதியுள்ளதாவது:—

"பம்பாய் நகரமானது, அரசியல் பெரும் புள்ளிகள் உள்ள புதுடில்லியைப் புறக்கணித்த எழுத்தாளர்கள் — ஓவியர்கள் — பட டைரக்டர்கள்—உயர்மட்ட அறிவாளர்கள் ஆகியோர் நிறைந்ததாகவும், குறுகிய அடிப்படையில் இல்லாமல் பலரும் கூடி வாழும் நகராக உள்ளது. இந்தியப் பொது நகராக உள்ள அதை, மொழி ரீதியில், மகாராட்டிரத்துக்கே உரிய தலைநகராக மாற்றும் முயற்சி நடக்கிறது.

"அந்நகரின் பரந்த பொதுத் தன்மைபற்றி 'சிவ சேனை' கவலைப்படவில்லை; அக்கட்சி, ஒரு சிலரின் நோக்கங்களுக்காகவே செயல்படுகிறது. குறைந்தபட்சம் வெளிக்குத் தெரியாத பயமுறுத்தல் மூலம் தென்னிந்தியர்களை விரட்டியடித்து, 'மகாராட்டிரம் மகாராட்டிரருக்கே' என்னும் அடிப்படையில் வாழ எண்ணம் கொண்டுள்ளது!

"பம்பாய் நகரமானது புதுடில்லி, கல்கத்தா, சென்னை ஆகியவற்றைப் போலன்றி பல மொழியினரும் கலந்த நகரமாகவே இருந்துவந்துள்ளது. அதற்கு அந்நகரம் பரந்த பொது நகரமாக இருப்பதும் ஒரு காரணமாகும்.

"சிவசேனையானது, பம்பாயின் வெளிச்சார்ந்த உயிர்த் துடிப்புத் தன்மைக்கு விரோதியாகும்."

# பெர்லின்--- [2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

★

கண்காட்சியைப் பார்த்ததும், பிற்பகல் மூன்று மணிக்கு மேற்குப் பெர்லின் நகருக்குத் திரும்பினேன். பெர்லின் நகரில் ஒரு சிறப்பு என்னவென்றால், ஆங்காங்கு திறந்த வெளிகளும், தோட்டங்களும், ஏரிகளும் உள்ளன. நகரின் ஓரத்துக்குச் சென்றால், அடர்ந்த காடுகள் வருகின்றன.

மேற்குப் பெர்லினில் 20 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்; கிழக்குப் பெர்லினில் 10 இலட்சம் மக்கள் இருக்கின்றனர்.

'இரண்டு ஜெர்மனியும் ஒன்றாக வேண்டும்' என்ற எண்ணம், ஜெர்மன் மக்களிடையே பரவலாக இருக்கிறது. சென்ற ஆண்டு 1966 ஜூலை மாதம், கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியும், மேற்கு ஜெர்மன் சோஷியல் டெமாகிரடிக் கட்சியும் கலந்து பேசுவதாக இருந்தன; ஆனால், பேச்சுவார்த்தை துவங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக ஒருவருக்கொருவர் தந்த அழைப்பிதழ்களில் இருந்த வாசகம் குறித்து சச்சரவு மூண்டு, பேசும் நிலை கைவிடப்பட்டுவிட்டது!

# இருபதாண்டுக் காலத்தில் நடந்திராத புதுமை!

# கறுப்புக் கொடி காட்ட வந்தவர்கள் கரம் குவித்து வரவேற்ற காட்சி!

## மக்களாட்சி மரபுக்கு எடுத்துக்காட்டாக அமைச்சர் மாதவன்

சென்னை, செப். 29—

"கழக அரசு தொழிலாளர்களுக்குச் செய்து வருகின்ற நன்மைகளைப் பற்றியும், அதற்கு திட்டமிட்ட எதிர்ப்புக் கிளப்பப்படுவதாகவும் இங்கு தோழர்கள் பேசினர். இன்று காலையிலும் கூட திருவொற்றியூரில் காங்கிரசார் காட்டுகிற கறுப்புக் கொடி பற்றிச் சிலர் என்னிடம் சொன்னார்கள்.

"எதிர்ப்பு இருந்தால்தான் சுவைக்கும். எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும்! அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்க வேண்டும்!

"'அமைதியான முறையில் எதிர்ப்பைத் தெரிவித்துக் கறுப்புக் கொடி காட்டுவது சனநாயக உரிமை' என்று நாம் முன்பு சொன்னோம்! ஆட்சியிலிருந்தபோது காங்கிரசார் அதை ஏற்கவில்லை! 20; ஆண்டுகளாச் சொன்னோம்—அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை! அடக்குமுறையை ஏவி அடக்கி ஒடுக்கினார்கள்!

"கழக அரசு அத்தகைய அமைதியான ஆர்ப்பாட்டத்துக்கு மதிப்பளிக்கிறது என்பதை நிறைவேற்றிக் காட்ட இன்று ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர்; அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று, சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் நேற்று மாலை திருவொற்றியூரில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தாழங்குப்பம் என்ற இடத்தில் நடந்த சச்சரவு தொடர்பாகக் காங்கிரசுக்காரர்கள் அமைச்சர் மாதவனுக்குக் கறுப்புக் கொடி காட்டியதைச் சுட்டிக்காட்டித்தான் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் நின்றிருந்த இடத்திற்கு அருகே தமது கார் சென்றதும் காரை நிறுத்தும்படி கூறி—பிறகு காரைவிட்டு இறங்கினார்! ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி நடந்தார்!

காங்கிரசுக்காரர்கள், தாங்கள் உயர்த்திப் பிடித்திருந்த கறுப்புக் கொடிகளைத் தாழ்த்திவிட்டு, கூப்பிய கரங்களோடு அமைச்சரை வரவேற்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கொடுத்த மனுக்களையும் அவர் ஏற்றார்.

காங்கிரசுக்காரர்கள் அமைச்சரைச் சூழ்ந்து நின்று, அவரிடம் தங்களது மனுக்களை அளித்தனர்.

"அண்ணா அவர்களிடம் எடுத்துரைக்கிறேன்; எல்லோருக்கும்—பாதுகாப்பு நிச்சயம் உண்டு—கிடைக்கும்" என்று அவர்களிடம் சொல்லி விடை பெற்றார்.

அங்கிருந்து விடை பெற்றுச் சென்ற அமைச்சர், 100அடிக்கு அப்பால் சென்றதும், அங்கே அவருக்கு மகத்தான வீர வரவேற்பு காத்திருந்தது!

'அண்ணா வாழ்க! மாதவன் வாழ்க!' என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன!

கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், பொதுமக்களும் மிகச் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

பல ஆயிரக்கணக்கான இருவண்ணக் கொடிகள், திருவொற்றியூர் கடற்காற்றிலே அசைந்தாடிப் பறந்தன! பாண்டு வாத்தியம் முழங்கிற்று!

காரிலிருந்து அமைச்சர் மாதவன் இறங்குவதற்குமுன், அவரது கார் மாலைகளால் நிரம்பியது! ஏராளமான தொழிலாளர்கள் அலை அலையாய் வந்து திரண்டிருந்தனர்! அவர்கள் எழுப்பிய வாழ்த்தொலி, விண்ணதிர ஒலித்தது!

காரைவிட்டு அமைச்சர் வெளியில் இறங்கியதும், ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்!

ரூ. 37 ஆயிரம் செலவில் கட்டப்பட்டிருந்த இம்பீரியல் டுபாகோ கம்பெனி தொழிலாளர் சங்கத்தின் கட்டிடத்தை அமைச்சர் திறந்துவைத்தார்.

மறைந்த தொழிற்சங்கத் தலைவர் டி. எஸ். இராமானுசம் பெயரால் கட்டப்பட்டுள்ள இத்தொழிலாளரின் குடியிருப்பில், இதையொட்டி நடைபெற்ற விழாவில் அமைச்சர் மாதவன் பேசினார்.

மயிலை சட்டமன்ற உறுப்பினரும் விம்கோ தொழிலாளர் சங்கத் துணைத் தலைவருமான இராம. அரங்கண்ணல், இவ்விழாவில் பங்கேற்று மறைந்த இராமானுசத்தின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

"காங்கிரசுக்காரர்கள் நடத்திய கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தின் மூலம், இத்தொழிற் சங்க விழா செய்தியைத் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பரவும்படிச் செய்துவிட்டனர்"

என்று அமைச்சர் மாதவன் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த விழா நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு சன்னதித் தெருவில் நடைபெற்ற பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் திறப்பு விழாக் கூட்டத்தில் அமைச்சர் மாதவன் பங்கு கொண்டு, காங்கிரசுக்காரர்களின் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் பற்றி விரிவாகப் பேசினார்.

கூட்டத்திற்குத் தொழிலாளர் தலைவர் ம. வெ. நாராயணசாமி தலைமை தாங்கினார்.

இங்கும் மக்கள் பெருந்திரளென வந்து கூடியிருந்தனர்.

இத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அ. பொ. அரசு, தொழிற் சங்கத் தலைவர் எஸ். இராகவானந்தம், தியாகி கன்னியப்பன், பார்த்தசாரதி ஆகியோர் காங்கிரசுக்காரர்களின் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்துப் பேசினர்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

களில் அதுல்யா கோஷும், நந்தாவும் முக்கியமானவர்கள்!

காமராசரின் போதாத காலம்—இந்தத் தேபர் வேறு—அதுல்யாவைச் சந்தித்துப் பேசியிருக்கிறாராம்! 'தலைவர் தேர்தலுக்கு நிற்பேன்' என்பதில் தேபரும் ஒருவராயிற்றே!

இப்படியெல்லாம் நிலைமையைப் பெரிதுபடுத்திவிட்டு, 'உடனே வாருங்கள்—பேச வேண்டும்' என்று அழைத்தால், ஓடிவிடுவதற்குக் காமராசர் என்ன—அவ்வளவு கோபதாபமில்லாத மனிதரா என்ன?

மேலிடமும், இந்திராவும் கொடுத்த அபயக்குரலுக்கு அசைந்து கொடுக்காமல் இருந்த 'அமைதி', காமராசரின் நின்று பாயும் போக்கைக் காட்டுவதாக இருப்பதாகப் புதுடில்லி பார்வையாளர்கள் கருதுகிறார்களாம்!

நிற்பதாவது, பாய்வதாவது! எல்லாம் தூரத்துப் பச்சை! நடுவில், நவம்பருக்குள் படுத்துக்கொள்ளாமல் இருந்தால் சரி!

கட்சியைக் கலைப்பது—தற்காலிகக் கமிட்டியை அமைப்பது—என்ற முடிவை, இனி காமராசர் சட்டப்படியோ, சமாதான முறையிலோ நினைத்தாலும், செய்ய முடியாதாம்! மீண்டும் காரியக் கமிட்டிக்கே போனாலும், இந்திராவும் நந்தாவும்தான் வெற்றி பெறுவார்களாம்!

இந்தியத் துணைக் கண்டத்தின் இரண்டு தலைமையமைச்சர்களை மிக நெருக்கடியான நேரத்தில் தேர்ந்தெடுத்தவர் நிலை இப்படி ஆகிவிட்டிருக்கிறது!

—எஸ். ஆர்.

---

## நடக்க இருப்பவை - பொதுக்கூட்டங்கள்

### 30--9--67

**பழனி**

மஜீத் நினைவு மன்றம், அண்ணா மறுமலர்ச்சி மன்றம் ஆகியவை சார்பில் இரவு 7-மணிக்கு நேருதிடலில்; தலைவர்: பி. எஸ். சேக்; பேசுவோர்: மாங்குடி மதியழகன், சி. டி. தண்டபாணி எம் பி., கே. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ., கா. வெங்கடாசலம், மு. சீவானந்தம்.

---

உள்ளும் புறமும்

# கறுப்பு உள்ளம்-- கறுப்புக் கொடி!

தி.மு.க. அமைச்சரவையின் அமைதிப் போக்கை—சனநாயக உணர்வை மேலும் ஒரு தடவை வெளிப்படுத்திய பெருமை, நேற்று திருவொற்றியூருக்குக் கிடைத்திருக்கிறது!

'கறுப்புக் கொடி வரவேற்பைப் பெறுவது தி.மு. கழக அமைச்சரவைக்கு இது முதல் தடவை' என்பதனைப்போலவே, சுதந்தரத்துக்குப் பின் இங்கே இராட்டைக் கொடி எந்தியவர்கள்—தேசியக் கொடி ஏற்றியவர்கள்—கறுப்புக் கொடி பிடிப்பதும் இதுவே முதல் தடவை!

அது மட்டுமல்ல; கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி ஓர் அமைச்சர் முன்சென்று—குறைகளைக் கேட்டறிந்தது—அவர்கள் சரித்திரத்திலேயே நடக்காதது!

அதை நேற்றையத் தினம் அமைச்சர் செ. மாதவன் செய்துகாட்டியிருக்கிறார்!

குறைகளைக் கேட்டிருக்கிறார்—முதலமைச்சரிடம் தெரிவிப்பதாக அறிவித்திருக்கிறார்—'தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்ற உறுதிமொழியினை அளித்திருக்கிறார்—ஆர்ப்பாட்டக்காரர்களின் மனுவைப் பெற்றிருக்கிறார்!

'வேண்டத்தகாத சம்பவம் நிகழ்ந்தால் வேண்டுமே' என்பதற்காக மட்டுமே போலீசுப் பாதுகாப்பு இருந்திருக்கிறது!

ஆனால் கொடி பிடித்தவர்கள் தடுப்புக்காவலில் முன்கூட்டிப் பிடிக்கப்படவில்லை; அல்லது, அந்த இடத்திலும் தடுத்துநிறுத்தப்படவில்லை! தடி கொண்டு தாக்கப்படவில்லை!

மதிப்புத் தரும் வகையில் அமைச்சர் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி நடந்தபோதும், எதிர்ப்பு முழக்கங்கள் எழுப்பப்பட்டவண்ணம் இருந்திருக்கிறது!

எனினும், போலீசாரின் குறுக்கீடு எதுவுமில்லை!

தாழங்குப்பம் சம்பவம் அடிப்படை ஏதுமில்லாமல் பெரிதுபடுத்தப்பட்டிருக்கிறது என்பது ஒருபுறமிருக்கட்டும்; அந்த நிலையிலும் காங்கிரசுக்காரர்களின் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் கழக அமைச்சரால் எப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதுதான் அவர்களால் உணர்ந்துகொள்ள வேண்டிய ஒரு பாடமாக இருக்கிறது!

இப்படி இருந்தால், அவர்கள் எதிர்பார்க்கும் 'வம்பு' விளைய மாட்டேனென்கிறதே! அரசியலில் 'தீனி' கிடைக்க மாட்டேனென்கிறதே!

எனவேதான், பொதுவாக இதையெல்லாம் மனத்தில் வைத்து,

**'போலீசு என்ன செய்கிறது--தூங்குகிறதா?'**

எனக் கேட்கிறார்கள்!

இராசபாளையம் பொதுக்கூட்டத்தில்கூட காமராசர், 'வெறும் வேடிக்கை பார்க்கப் போலீசுப் படை தேவையா? இதற்காகவே ரூ 10 கோடி செலவு செய்யப்படுகிறது?' என்று கேட்டு விசனப்பட்டுக்கொண்டிருக்கிறார்!

திருவொற்றியூரில், காங்கிரசார் எதிர்பார்த்து வந்தது ஒன்று—நடந்தது வேறு!

காங்கிரசுக்காரர்களின் கரங்களில் மட்டும் இப்போது கறுப்புக் கொடி இல்லை—உள்ளத்திலும் இருப்பது அந்த எண்ணமே!

— எஸ். ஆர்.

---


## 'நியூலாண்ட்'

(வார ஏடு)

கௌரவ ஆசிரியர்:
**சி. பி. சிற்றரசு** எம்.எல்.பி.

ஆசிரியர்:
**இராமசாமி** பி.காம்., பி.எல்.

1--10--67 மாலை 6-மணிக்கு
பெங்களூர்–சிராமபுரம்
நிகழ்ச்சியில்
**நாவலர் நெடுஞ்செழியன்**
அவர்கள்
முதல் இதழை வெளியிடுகிறார்கள்


---

**காஞ்சிபுரம்**

தி.மு.க. ஆதரவாளர்கள் சார்பில் மாலை 6-30 மணிக்கு மூன்றும் திருவிழா மண்டபத்தில்; பேசுவோர்: அமைச்சர் முத்துச்சாமி, சி. சிட்டிபாபு எம்.பி. (காலை 11-மணிக்கு ஏழைகளுக்கு உணவளிக்கப்படும்; மாலை 6-மணிக்கு திருமதி சம்பா. வெங்கடாசலம் பி. எஸ்சி. ஆனர்ஸ். தலைமையில் ஏழைகளுக்கு புதிய ஆடை வழங்கப்படும்; இரவு 9-மணிக்கு சேலம் ப கண்ணன் அவர்களின் முத்தமிழில் முப்பால் குறள்நெறி விளக்கம் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**வந்தவாசி**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு அச்சரப்பாக்கம் ரோட்டில்; தலைவர்: க. ப. தமிழ்மணி; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., எஸ். முத்துலிங்கம் எம்.எல்.ஏ., வி. டி. அண்ணாமலை எம்.எல்.ஏ., எஸ். கே. ரெசாக், எம். கே. இப்ராகிம், ஆர். வேணுகோபால், பா. துரைராசு, கே. எஸ். ஏ. இப்ராகிம், கே. எஸ். ஏ. வகாப், பி. இராசாராமன்.

---

## கலை நிகழ்ச்சிகள்

**சென்னை**

சென்னை சட்டக் கல்லூரி எதிரில் — என். எஸ். சி. போஸ் ரோடு பகுதி சிறு வியாபாரிகள் சார்பில் 1—10—67 காலை 9 மணிக்கு ந. செயராமன் தலைமையில் பி. கே. இராமதாஸ் எம்.சி. ஏழைகளுக்கு உணவு அளிப்பார்; இரவு 8 மணிக்கு கோ. செங்குட்டுவன் தலைமையில் — வீராசாமி எம்.எல்.ஏ., என். வி. என். சோமு பி.ஏ. ஆகியோர் முன்னிலையில் சதாசிவம் – மோகனா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

சென்னை 31-வது வட்ட தி.மு.க. சார்பில் 1—10—67 இரவு 7 மணிக்கு பெரம்பூர் படேல் ரோட்டில், இரா. அ. சிதம்பரம் தலைமையில், சதாசிவம் – மோகனா குழுவின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

**சேலம்**

சேலம் உதயசூரியன் படிப்பகச் சார்பில் 30—9—67 இரவு 8 மணிக்கு தாரமங்கலம் மெயின் ரோடில் அறிஞர் அண்ணா படத் திறப்பு விழா நடைபெறும்; மா. ரங்கராசன் இனிப்பு வழங்குவார்; மாலை 6 மணிக்கு சீனிவாசா பூங்கா அருகில் வி. எஸ். நாராயணன் தலைமையில் தேவராசன் – நிர்மலா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

---

## குன்னத்தூர் க. அன்பரசு

சுற்றுப்பயணம்

அக். 1: பொள்ளாச்சி 1-வது வட்டம்; 3: கோபி வட்டம்; 4: கொளாநல்லி; 5: பெருந்துறை; 6: அன்னூர்; 7: ஈரோடு; 8: உடுமலை; 14, 15: வால்பாறை வட்டம்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13, [illegible] வெளியிடப்படுகிறது.